**செ. கு. எண்:170** **நாள்: 01.11.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை –1.11.2017

சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், கொடுங்கையூர், ராஜரத்தினம் நகரைச் சேர்ந்த திரு. மூர்த்தி என்பவரின் மகள் செல்வி யுவஸ்ரீ மற்றும் திரு. பார்த்திபன் என்பவரின் மகள் செல்வி பாவனா ஆகிய இருவரும் இன்று (1.11.2017) எதிர்பாராத விதமாக தேங்கியிருந்த மழை நீரில் இருந்த மின் வயரை மிதித்ததில், மின்சாரம் தாக்கி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வி யுவஸ்ரீ மற்றும் செல்வி பாவனா ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக தொடர்பு கொண்டு இனி வருங்காலங்களில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளேன்.

இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வி யுவஸ்ரீ மற்றும் செல்வி பாவனா ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**